2014 ஜூலை 24]
242—

புதிய கட்டடம்

***33570—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, பருத்திபாடு மற்றும் நெல்லையப்பபுரம் கிராமங்களிலுள்ள அங்கன்வாடி மையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், பருத்திப்பாடு அங்கன்வாடி மையம் 1992 முதல் அரசுக் கட்டடத்தில் நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது. நெல்லையப்பபுரம் அங்கன்வாடி மையத்திற்கு 620/4/ஏ2 என்ற சர்வே எண்ணில் இடம் தேர்வு செய்யப்பட்டு புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி, பருத்திப்பாடு ஊராட்சி, பருத்திப்பாடில் சுமார் 2,500 மக்கள் வசிக்கின்றார்கள். பருத்திப்பாடில் இயங்கிவரும் அங்கன்வாடி மையத்தில் 30 குழந்தைகள் பயில்கின்றார்கள். அந்த மையம் பழுதடைந்த சிமெண்ட் ஷீட் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இப்பகுதியில் அங்கன்வாடி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட போதிய இடவசதியும் உள்ளது.*

பருத்திப்பாடு ஊராட்சி, நெல்லையப்பபுரம், நெல்லை நகர், செல்வி நகர், செல்வம் நகர் ஆகிய பகுதிகளில் சுமார் 1,500 மக்கள் வசிக்கின்றார்கள். நெல்லையப்பபுரத்தில் உள்ள அங்கன்வாடி மையத்தில் 25 குழந்தைகள் பயில்கின்றார்கள். இம்மையம் கத்தோலிக்க கிறிஸ்துவ சபைக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது. அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டடம் கட்ட போதிய இடவசதி உள்ளது. ஆகையால் இவ்விரு அங்கன்வாடி மையங்களுக்கும் புதிய கட்டடம் கட்ட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் குறிப்பிட்டதுபோல, பருத்திப்பாடு மையம் அரசு கட்டடத்தில்தான் இயங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்டடம் பழுதடைந்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பழுதடைந்த கட்டடங்களைச் சீர்செய்து தரவேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே பருத்திப்பாடு மையத்தை நிச்சயமாக சீர் செய்து தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் சில மையங்களைக் குறிப்பிட்டு, அங்கெல்லாம் புதியதாக கட்டடங்கள் கட்டித் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நாங்குநேரி வட்டாரத்தில் மட்டும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி 11 புதிய மையங்கள் தேர்வு செய்யப்பட்டு கட்டப்படவிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தக் கிராமத்திற்கு முக்கியத்துவம் தரவேண்டுமென்று குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால், இந்த 11 மையங்களிலே, அந்த ஊர்களின் பெயர்களையும் சேர்த்துக்கொண்டு, கட்டித் தருவதற்கு நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

2014 ஜூலை 24]

திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதியில் 11 புதிய அங்கன்வாடி மையங்கள் கட்டப்பட இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கூறினார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.*

திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன்.*

புவனகிரி தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், மந்தாரக்குப்பம், பாலாஜி நகரில் குறு அங்கன்வாடி மையம் இயங்கி வருகின்றது. அந்த மையம் முதன்முதலாகத் தொடங்கப்பட்டபோது குறைவான குழந்தைகள் இருந்தார்கள். அந்தப் பகுதியில் 385 குடும்பங்கள் உள்ளன; மொத்த மக்கள் தொகையாக 1,622 பேரும், அவர்களில் 126 குழந்தைகளும், 10 முதல் 19 வயது வரை உள்ள வளரிளம் பெண்கள் 129 பேரும் உள்ளார்கள். அதனால், அந்த 4ஆம் எண்ணுள்ள குறு அங்கன்வாடி மையத்தை, அங்கன்வாடி மையமாகத் தரம் உயர்த்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கன்வாடி மையமாக மாற்றுவதற்கென்று மத்திய அரசு சில அளவுகோல்களை, விதிகளை நிர்ணயம் செய்திருக்கிறது. அங்கு குறைந்தபட்ச மக்கள்தொகை 400 இருக்கவேண்டும்; அதிகபட்ச மக்கள்தொகை 800 இருக்கவேண்டும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்கே அதிகமான மக்கள்தொகை இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார். அதன் அடிப்படையிலே, குறு அங்கன்வாடி மையம் அங்கு செயல்படுமேயானால், விதிகளுக்குட்பட்டு, அதை அங்கன்வாடி*

மையமாக மாற்றித் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 243, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

243—

நியாய விலைக் கடை

***19167** **திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, கிருஷ்ணன்கோவில் பகுதியில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் பாட்டக்குளம், சல்லிபட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின்கீழ், சொக்கலாம்பட்டி முழுநேர நியாய விலைக் கடை 405 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இக்கடையுடன் 170 குடும்ப அட்டைகளை உள்ளடக்கிய கிருஷ்ணன்கோவில் பகுதியும் இணைக்கப்பட்டுள்ளது. இரு பகுதிகளுக்கும் இடைப்பட்ட தூரம், நிர்ணயிக்கப்பட்டுள்ள 1½ கி.மீ. தூரத்திற்குப் பதிலாக, 1 கி.மீ. மட்டுமே உள்ளது. அரசு வகுத்தமைத்த நெறிமுறைகளின்படி, குடும்ப அட்டைகளைப் பிரித்தபின் தாய்க் கடையில் குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்கவேண்டும். ஆனால், இந்நேர்வில் தாய்க் கடையிலிருந்து குடும்ப அட்டைகளைப் பிரித்தால், 235 குடும்ப அட்டைகளே எஞ்சியிருக்கும். எனவே, இரண்டு நிபந்தனைகளும் பூர்த்தியாகாததால், கிருஷ்ணன்கோவில் பகுதியில் நியாய விலைக் கடை தொடங்க சாத்தியக் கூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.